( மாணவர்கள் பெயரும்,பள்ளி பெயருடன் ஊர் எழுதவும்) நாள்:

பாடம் : இலக்கிய வகைச் சொற்கள்

இணைய பணித்தாள்

வகுப்பு 7

பெயர் :

பள்ளி :

அ..சரியான விடைத் தேர்வு செய்க..

1. ஓர் எழுத்து தனித்தும் ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்தும் வந்து பொருள் தருவது_____

அ. எழுத்து ஆ. வாக்கியம் இ. சொல் ஈ. பத்தி

2. சொல்லிற்கு வழங்கப்படும் பெயர்களில் ஒன்று வேறுபட்டுள்ளது.

அ. மொழி ஆ. பதம் இ. கிளவி ஈ. உரை

3. இலக்கிய வகைச் சொற்கள் _____-- வகைப்படும்

அ. 5 ஆ. 6 இ. 4 ஈ. 3

4. இலக்கண வகையால் சொற்கள் _____-- வகைப்படும்

அ. 4 ஆ. 3 இ. 6 ஈ. 5

5. எளிதில் பொருள் விளங்கும் வகையில் அமைந்த சொற்கள்_____

அ. இயற்சொல் ஆ. திரிசொல் இ. திசைச்சொல் ஈ. வடசொல்

6. கற்றோருக்கு மட்டுமே பொருள் விளங்கக்கூடியச் சொற்கள் _____

அ. இயற்சொல் ஆ. திரிசொல் இ. திசைச்சொல் ஈ. வடசொல்

7.முற்காலத்தில் பாண்டிநாட்டைத் தவிர, தமிழ்நாட்டின் பிற பகுதியில் வழங்கிய சொற்களையும் _____ என அழைத்தனர்.

அ. இயற்சொல் ஆ. திரிசொல் இ. திசைச்சொல் ஈ. வடசொல்

8. சமஸ்கிருத மொழி சொற்கள் _____-- எனப்படும்.

அ. இயற்சொல் ஆ. திரிசொல் இ. திசைச்சொல் ஈ. வடசொல்

9. பல பொருள் தரும் ஒரு சொல் என்பது_____

அ. இயற்சொல் ஆ. திரிசொல் இ. திசைச்சொல் ஈ. வடசொல்

10. வடசொற்களை _____ வகையாகப் பிரிப்பர்

அ. 2 ஆ 3 இ. 4 ஈ. 5

ஆ. பொருத்துக:–

1. இயற்சொல் – பெற்றம்
2. திரிசொல் – இரத்தம்
3. திசைச்சொல் – அழுவம்
4. வடசொல் – சோறு

இ. கோடிட்ட இடம் நிரப்புக:–

1. மண்,பொன் என்பது _____ சொல்
2. வங்கூழ் என்பது _____சொல்
3. இயற்சொல் _____ வகையாக வரும்.
4. இயம்பினான் என்பது _____ திரிசொல்
5. சக்கரம் என்பது _____சொல்
6. பெற்றம் என்பது _____-- சொல்



LIVEWORKSHEETS